RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
DOI: 10.34256/irjt224s132
OPEN ACCESS

# முப்பாலில் ஒருமை, எழுமை, எழுபிறப்பு - உரையாசிரியர்களின் விளக்கங்களும், மூலத்தை அடிப்படையாகக் கொண்ட இன்றைய அணுகுமுறைகளும்

**மி.சு. எழிலரசி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா

# Oneness, Seven Worlds, Transmigration, - Interpretations by Commentators and Present-Day Approaches Based on the Source

**M.S. Ezhilarasi** [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author: anni.ezhil3@gmail.com

Received: 27-05-2022
Revised: 20-08-2022
Accepted: 01-09-2022
Published: 06-10-2022

Check for updates

**ABSTRACT**

Thirukkural, which is hailed as a World of Hymn, begins with the blessing of God. So, the book composed on the basis of God's doctrine is Thirukkural. In Thirukkural, when the commentators give explanations for such words as fate, seven worlds, and birth, it is consistent with the principles of religions that do not believe in God. Although many texts have been written for Thirukkural, all but a few have been written largely in imitation of earlier texts. Only a few commentators have looked at the source correctly and have deeply grasped Thiruvalluvar's mind and expressed it in their speeches. An attempt has been made in this research paper to analyze such texts and search for the correct meaning of the words Ezhumai and Ezhrupirappu mentioned by Thiruvalluvar. What is the correct meaning of rebirth? Does that mean seven births? Just as the correct meaning of the words ``unity'' and ``ezhumai'' is asked directly to Thiruvalluvar himself, it has been examined within the Thirukkural book itself by comparing the meaning of one kural with another. A few inconsistencies in the texts have been pointed out by heavily examining only the source. Though it is the text of the best interpreter who has studied and interpreted Thirukkural as if it pierced the atom, the places which appear to be descriptive in relation to knowledge and science have been explored with the aim of finding clarity. This article is examined in the footsteps of the study that was done from the point of view of innovation and thought in the way shown by Thiruvalluvar with the aim of seeing reality.

**Keywords:** Thiruvalluvar, Ezhumai, Rebirth, Ezhrupirappu

## முன்னுரை

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டக் கூடிய சிறப்புடையதாகப் பாராட்டப்படும் இத்திருக்குறள் உலகனைத்திற்கும் பொதுமறையாகவும், எம்மதத்தவரும் தம்முடையது என உரிமை பாராட்டத்தக்க வகையில், எக்காலத்திற்கும் எல்லா மனிதருக்கும் பொருந்துவதான உண்மைப் பொருளை விளக்கி நிற்கும் பொதுமைப் பண்புடையதாகவும் அமைந்துள்ளது. இந்த பொதுமறையாகிய திருக்குறள் திருமறையாக அமைந்துள்ளது. மறை - கடவுள் கொள்கை. எந்தக் குறிப்பிட்ட சமயத்துக்குள்ளும் உட்படாமல் அனைத்து சமயங்களுக்கான பொதுவான கொள்கையை வலியுறுத்தி நிற்கின்றது.

திருக்குறள் மட்டுமல்லாது மரபு வழியில் இயற்றப்பட்டுள்ள செய்யுள் நூல்களைப் புரிந்து கொள்ள உரையாசிரியர்களின் துணை இன்றியமையாது தேவைப்படுகிறது. கால மாற்றங்களுக்கு ஏற்ப, உலக வழக்கில் பயன்பாட்டில் மாற்றமடையக் கூடிய சொற்கள் இலக்கியங்களிலும் பரவிக் காணப்படுகின்றன. அச்சொற்களுக்கான இன்றைய பொருளையும், எழுத்து ஊடகங்கள் வளர்ச்சி பெறாத அன்றைய கால கட்டத்தில் ஓலைச் சுவடிகளில் சுருங்கிய வடிவில் இயற்றப்பட்டுள்ள செய்யுள்களுக்கு மிக விளக்கமான, விரிவான உரைகளை வழங்கியிருப்பவர்கள் உரையாசிரியர்களே ஆவர். அதே சமயம் இந்த உரையாசிரியர்கள் ஒரே நூலுக்குப் பலர் உரை எழுதுகின்றபோது அவர்களது உரைகளுக்குள்ளே சிற்சில மாறுபாடுகள் இருக்க வாய்ப்புள்ளது. உரையாசிரியர்கள் உரையெழுதிய காலகட்டம், காலச்சூழல் இவற்றிற்கு ஏற்பவும் இந்த முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்த உரைகளின் வழி திருக்குறள் நூலைப் பயில்கின்ற நாம் சரியான பொருளை உணர்ந்து கொள்வது எவ்வாறு? அதற்கான வழியைத் திருவள்ளுவரே மிகத் தெளிவாக நமக்குக் கூறுகிறார்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற வழிகாட்டுதலை வள்ளுவர் நமக்குத் தருகின்றார் (Parimelagar,1991).

எனவே திருக்குறளில் உள்ள சில சொற்களுக்கான பொருள் விளக்கத்தை ஆய்வு செய்கின்ற போது உரையாசிரியர்களிடம் செல்வதற்கு முன், நூலாசிரியராகிய திருவள்ளுவரிடமே நேரடியாகச் சென்று விளக்கத்தைத் தேடுவது இன்றியமையாததாக உள்ளது. மிகச் சிறந்த உரையாகக் கருதப்படும் பரிமேலழகர் உரை முதற்கொண்டு, அதனைப் பின்பற்றி எழுந்துள்ள அனைத்து உரைகளையும் திறனாய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகி, திருவள்ளுவரின் மூலத்தோடு ஒத்து செல்கின்ற, முரண்படுகின்ற தன்மைகளை ஆராய்வது இன்றியமையாததாகிறது. அந்த அடிப்படையில் திருக்குறளில் இடம்பெற்றுள்ள பிறப்பு பற்றிய கோட்பாடு, அதனை விளக்கும் சில சொற்களுக்கான பொருள் விளக்கம் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## திருக்குறளில் கடவுட் கொள்கை

திருக்குறளானது குறிப்பிட்ட சமயத்திற்கு உட்படாமல், ஆனால் கடவுளைப் பற்றிச் சிறப்பாக விளக்கக் கூடிய பொதுமறையாக விளங்குகிறது. இருப்பினும் சில சமயங்களின் கொள்கைகள் திருக்குறளுக்குள் விரவிக் காணப்படுவது இதன் பொருளை ஆழ்ந்து நோக்கினால் புலப்படும். திருக்குறளை ஆழமாக ஆய்வு செய்துள்ள க.ப. அறவாணன் அவர்கள் திருவள்ளுவம் என்னும் தம்முடைய நூலில், "அற நூல்களின் தோற்றத்திற்கு அரசியல் அமைதியும், அற நூல்களின் கருப்பொருளுக்கு மதங்களும் காரணமாக உள்ளமை புலப்படும். தம் மத ஒழுக்கத்தை வற்புறுத்தவும், பரப்பவும் அற நூல்களை முன்னோர் பயன்படுத்திக் கொண்டனர், என்று கருத வேண்டியுள்ளது. திருக்குறளில் மதச் சார்பு தெளிவாகத் தெரியவில்லை" என்ற தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார். மேலும் திருக்குறளில் கடவுளைக் குறிக்கும் சொற்களான, இறை, இறைவன், செம்பொருள், மெய்ப்பொருள், வாலறிவன், தனக்குவமை இல்லாதான், எண் குணத்தான், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி அந்தணன் முதலான சொற்கள் இடம்பெற்றிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். "நூல்களில் முதன் முதலாகக் கடவுள் வாழ்த்துப் பாடப் பெற்ற நூல் திருக்குறள். சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் கடவுள் வாழ்த்து திருக்குறளுக்குப் பின்னரே பாடப்பெற்றது. கடவுள் வாழ்த்தில் கடவுளைக் குறிப்பிடும் இடங்கள் எல்லாம் ஆண்பால் ஈற்றையே தாங்கியுள்ளன." இவ்வாறு அவர் குறிப்பிடுவதிலிருந்து குருவாக மனித உரு ஏற்று வந்த இறைவனை சைவம், கிறஸ்தவம் முதலான சமயங்கள் போற்றி வணங்கும் கொள்கை உள்வாங்கப்பட்டிருப்பது புலனாகிறது (Aravanan, 2003).

## எழுமையும், எழுபிறப்பும்

எழுமை, எழுபிறப்பு என்னும் சொற்கள் திருக்குறளில் சில குறட்பாக்களில் காணப்படுகின்றன. அச்சொற்கள் அடங்கியுள்ள குறட்பாக்களுக்கான பொருள் விளக்கமானது, கடவுள் நம்பிக்கையற்ற

நாத்திகக் கொள்கை அடிப்படையில் அமைந்திருப்பதாகவே பெரும்பாலான உரைகளில் காணப்படுகிறது. பொதுமறை, பொய்யா மொழி, வேதம் எனப் புகழப்படும் திருக்குறள் கடவுள் நம்பிக்கை உடைய வள்ளுவர் பெருமகனால் கடவுள் நம்பிக்கை அடிப்படையில் எழுதப்பட்ட நூலே என்பதை முன்னர் கண்டோம். பாயிரம் மட்டுமல்லாது, அதிகாரங்களுக்குள்ளும் பல குறட்பாக்கள் கடவுளின் தன்மையை, செயல்பாட்டை வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. ஆனால் எழுமை, எழுபிறப்பு ஆகிய சொற்களுக்கான பொருள் நாத்திகக் கொள்கை அடிப்படையில் உரைகளில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

1. எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்

விழுமம் துடைத்தவர் நட்பு.

2. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து.

3.ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து.

4. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா(து)

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

5.ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்

தான்புக் கழுந்தும் அளறு.

மேற்கண்ட குறட்பாக்களில் முதலில் உள்ள குறட்பாவில் எழுமை, எழுபிறப்பு என்ற இரு சொற்களும் ஏழு பிறவி எடுத்தல் என்ற ஒரே பொருளைத் தருகின்றனவா? மூன்று குறட்பாக்களில் எழுமை என்ற சொல் வருமிடத்து முதலில் ஒருமை என்ற சொல்லும் இணைந்தே வருகிறது (Parimelagar,1991). இந்த ஒருமை என்பதற்கு ஒரு பிறவி எனவும், எழுமை என்பதற்கு ஏழு பிறவி எனவும் உரையாசிரியர்கள் கூறியுள்ள பொருள் பொருந்துமா? என்ற கேள்வி வருகிறது. ஏழு பிறவி என்பது பொருத்தமான விளக்கம் என்றால் மறுபிறவி என்பது ஏழு முறை மட்டுமே உண்டா? அப்படியெனில் நாம் பிறந்திருக்கும் இந்தப் பிறவி எத்தனாவது பிறவி என நமக்குத் தெரியுமா? ஏழு பிறவிக்குப் பின்னர் பிறவி நீக்கம் வந்து விடுமா? என்ற வினாக்கள் எழுகின்றன. ஆனால் பிறவிச் சுழற்சி கொள்கைப்படி பிறவிகள் ஏழேழு பிறவிகள் என ஆயிரமாயிரமாய்த் தோன்றிக் கொண்டேயிருக்கும் எனச் சொல்லப்படுகிறது. எழு பிறப்பு என்பதற்கு ஏழுவகை பிறவிகள் எனப் பொருள் கூறும் உரையாசிரியர்களும்

“ஊர்வ பதினொன்றா மொன்பது மானிடம்

நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ் - சீரிய

பந்தமாந் தேவர் பதினா லாயன்படைத்த

வந்தமில்சீர்த் தாவரநா லைந்து.”

எனப் பலகோடி உயிர்களைச் சான்று காட்டுகின்றனர்.

எனவே எழுமை என்பதற்கு ஏழு பிறப்பு அல்லது ஏழு வகையான பல ஆயிரம் பிறப்புகள் என்பதே உரையாசிரியர்களின் விளக்கமாக அமைகின்றது (Parimelagar,1991).

“வள்ளுவம் பகர்வது ஏழு பிறப்பா? எழு பிறப்பா?

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமம் துடைத்தவர் நட்பு”

என்ற இக்குறட்பாவிற்கு டாக்டர் மு.வ. அவர்களின் உரையில், "குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது. துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது" (Varatharasanar, 1949).

இதே குறளுக்கு தவத்திரு. குன்றக்குடி அடிகளார் கூறியுள்ள விளக்கமாவது, "தனக்குற்ற துன்பத்தினை நீக்கியவருடைய நட்பை ஏழு பிறப்பிலும் நினைப்பவர் நல்லோர். நெடிய காலம் அல்லது வாழ்நாள் முழுவதும் நினைப்பர் என்பது குறிப்பு" (Kundrakkudi Adigalaar, 2011).

டாக்டர் மு.வ. அவர்களின் உரையில், 'எப்போதும் விடலாகாது' எனப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளார். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தனக்கு முந்திய உரையாசிரியர்களைப் பின்பற்றி ஏழு பிறப்பிலும் எனக் கூறிய போதிலும், அடுத்த வரியில் நெடிய காலம் அல்லது வாழ்நாள் முழுவதும் நினைப்பர் என்பது குறிப்பு எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே ஏழு பிறவி என்பதில் அவருக்கும் ஐயம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள எழுமை, எழுபிறப்பு என்ற இரு சொற்களும் ஒரே பொருளைத் தரும் எனில் ஒரு குறட்பாவில் ஏன் அடுத்தடுத்து இரு சொற்களைப் பயன்படுத்த வேண்டும். எழுமை என்பதற்கு ஏழு பிறவிகள் என்பது பொருள் என்றால் எழுவகைப் பிறப்பு, எழுபிறப்பு எனக் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறியதாக, பிழை என்பதாக அல்லவா அமைந்து விடும். பிறவிச் சுழற்சி கொள்கைப்படி பல பிறவிகள் எனப் பொருள் கொண்டால் ஒரு பிறவியில் ஒருவர் செய்த நன்மையை எவரேனும் பல பிறவிகளுக்குப் பின்னரும் நினைந்து போற்றுவதாகச் சான்றுகள் உள்ளதா? அல்லது அவ்வாறு நினைவுகூர முடியும் என்ற கொள்கை எங்காவது உள்ளதா? என்ற கேள்விகள் எழுகின்றன. சமணக் காப்பியங்கள் சிலவற்றில் முற்பிறவி வினைகளை நினைவு கூர்ந்ததாகச் சான்றுகள் இருந்தாலும், அது முந்தின பிறவியை மட்டுமே குறிக்கிறது. பல பிறவிகளைத் தாண்டி நினைவு கூர்வதாக இல்லை. உதாரணமாக சிலப்பதிகாரத்தில்,

"விஞ்சையின் பெயர்த்து விழுமம் தீர்த்த

எம்குல தெய்வப் பெயர்"

என்ற அடிகள் இடம்பெற்றுள்ள பகுதியில் முன் பிறப்பு பற்றிக் கூறப்படுகிறது (Swaminatha Iyer, 2009). அதாவது, மாதவி தம்முடைய குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் எனக் கோவலனைக் கேட்ட பொழுது, சென்ற பிறவியில் பெரும் துன்பத்தை நீக்கி உதவிய தம் குலத் தெய்வத்தின் பெயரான மணிமேகலையின் பெயரை வைக்கலாம் எனக் கோவலன் கூறியதாக இடம்பெற்ற பகுதியில் முந்தைய பிறவி மட்டுமே கூறப்பட்டுள்ளது. மூன்று பிறவிகளுக்கு முன்னால் நடந்த செய்தியைக் கூறுவதாக எந்தக் குறிப்புகளும் இல்லை.

மேலும், பிறவி சுழற்சிக் கொள்கைப்படி குற்றம் புரிந்தவர்களுக்கு மட்டுமே அதற்குத் தண்டனையாக அடுத்தடுத்த பிறவிகள் ஏற்படும். ஒருவர் செய்த நன்றியை மறவாமல் போற்றும் நல்லவர்களுக்கு ஏன் ஏழு பிறவிகள் ஏற்பட வேண்டும். இது பிறவி சுழற்சிக் கொள்கையாளர்களின் கருத்துக்கும் முரணாக அமைந்துள்ளதல்லவா? அப்படியானால் பிறவி நீக்கம், முக்தி என்பது யாருக்குக் கிடைக்கும்? என்ற கேள்வியும் எழுகின்றது. உலகில் வாழும் மனிதர்களில் எவரேனும் முற்பிறவியில் தனக்கு ஒருவர் இன்ன நன்மை செய்தார் என்று சொல்லி நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறார்களா? அப்படி யாரும் சொல்வதாகத் தெரியவில்லை. அப்படியெனில் உலகில் உள்ள மக்கள் அனைவருமே நன்றி கெட்டவர்கள் என்று வள்ளுவர் சொல்கிறாரா? முந்தின பிறவிகளின் நன்மைகளை நினைந்து நன்றி கூறும் மக்களே இல்லையா? என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன. இதற்கு முனைவர் மு. தெய்வநாயகம் அவர்கள் தரும் விளக்கம்: "அடுத்தவர் தமக்குச் செய்த நன்மையை நினைக்கும் நன்றியுடையவர்கள் தங்கள் துன்பத்தைப் போக்கியவருடைய நட்பினைத், தங்களுக்கு எழும் பருவங்கள் அனைத்திலும், தங்கள் பரம்பரையினருடன் விடாது நினைப்பார்கள்" (Deivanayagam, 1972).

"இனி அடுத்த குறட்பாவை நோக்குவோம்:

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப்பு உடைத்து"

இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர் தரும் பொருளாவது: "ஆமை போல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்கவல்லானாயின், அவ்வன்மை அவனுக்கு ஏழுபிறப்பின்கண்ணும் அரணாதலை உடைத்து" (Parimelagar,1991).

அதாவது ஒரு பிறவியில் தம் ஐம்புலன்களை அடக்கி, அடக்கத்தோடு வாழ்பவர்களுக்கு அந்த அடக்கம் ஏழு பிறவிகளிலும் அல்லது ஏழு வகையான பல்லாயிரம் பிறவிகளிலும் பாதுகாவலாக அமையும் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. பிறவி சுழற்சிக் கொள்கைப்படி பல பிறவி என்பது ஓரறிவு உயிரிலிருந்து ஆரம்பித்து இறுதியில் மனிதப் பிறவி அடைந்து முக்தி பெறுவதாகக் குறிக்கப்படும். ஆனால் இந்த குறட்பாவிற்குரிய விளக்கத்தில் மனிதப் பிறவியில் இருக்கும் ஒருவருக்கும் அவர் அடக்கத்தைக் கடைப்பிடித்தால், அது முதலில் தோன்றிய பிறவிகளுக்குக் காவலாக அமையும் என்று தலைகீழாகக் கூறுவதாக உள்ளது. "பத்தாம் வகுப்பில் பயிலும் ஒரு மாணவனிடம், 'இதைத் தெரிந்துகொள். இக்கருத்து உனக்கு இரண்டாம் வகுப்புக்குப் பயன்படும்' என எந்த ஆசிரியராவது கூறுவாரா? அப்படி ஓர் ஆசிரியர் கூறினால், அவருடைய அறிவு நிலையைப்பற்றியே மாணவன் ஐயுறுவான் அல்லவா? 'அடக்கல்' - எதற்குப் பயன்படுகிறது? பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி பிறவி நீக்கத்திற்கல்லவா பயன்படுகிறது?" (Deivanayagam, 1972) பிறவிசுழற்சிக் கொள்கை அடிப்படையில் வள்ளுவர் இக்குறட்பாவைக் கூறினார் எனக் கொண்டாலும், அவர் ஆறாவது அறிவைப் பெற்றிருக்கும் மேலான பிறவியாகிய மனிதப் பிறவிக்குப் பிறகு எதிர்நோக்கக் கூடிய முக்திக்கான வழியைக் கூறுவாரேயன்றி, மீண்டும் கீழான பிறவிக்குப் பயன்படும் காரியங்களைப் பற்றிப் பேசுகிறார் எனப் பொருள் காண்பது வள்ளுவரின் அறிவுக்கும், புலமைக்கும் இழுக்காகும் அன்றோ! இந்த அடிப்படையில் இந்தக் குறளுக்கு அவர்கள் தரும் விளக்கம்: "ஆமையைப்போல் ஒருவன் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனானால் அவ்வல்லமை அவனுக்குத் தொடர்ந்து எழுந்து வருகின்ற பல நிலைகளிலும் பாதுகாப்பாகும் சிறப்புடையது" (Deivanayagam, 2021).

"அடுத்ததாக கல்வி பற்றிக் கூறும் குறட்பா,

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பதற்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரை, "ஒருவனுக்கு தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பினும் சென்று உதவுதலையுடைத்து" என்பதாக உள்ளது (Parimelagar,1991). இங்கும் எழுபிறப்பினும் என்பது, ஏழு வகையான பிறவியாகிய பல்லாயிரம் பிறவிகளையே குறிக்கிறது. அஃதாவது, ஓரறிவு முதல் தேவர்கள் வரையுள்ள பிறவிகளையே குறிக்கிறது. இதை விளக்கமாகக் கூறினால், ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது, அவன் தேவராக, மிருகமாக, பறவையாக, மரமாக அல்லது புல் பூண்டாக எவ்வகைப் பிறவியில் பிறந்தாலும்கூட அஃது அவனைத் தொடர்ந்து சென்று உதவும் எனப் பொருள் படுகிறதன்றோ? அப்படியானால் இப்போது நாம் காணும் விலங்குகளில் முற்பிறவியில் கற்ற விலங்கு எது? கற்காத விலங்கு எது? எனவும், மரங்களில் சென்ற பிறவியில் கற்ற மரம் எது? கற்காத மரம் எது? என வேறுபாடு கண்டறிய முடிகிறதா? அப்படியில்லை, இப்பிறவியில் கற்ற கல்வி அடுத்தடுத்த மனிதப் பிறவிக்கே பயன்படும் என்றால், பள்ளியில் கல்வி கற்கும் ஒரு மாணவனிடம் நீ கவனமாகப் பாடங்களைக் கற்க வேண்டும் என்று கூறினால், அவன் நான் போன பிறவியிலேயே மிகச் சிறப்பாக எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்து விட்டேன். வள்ளுவர் கூறியிருப்பது போல, அது இந்தப் பிறவியில் எனக்குப் போதுமானது, நான் கற்கத் தேவையில்லை என்று கூறினால் அம்மாணவனுக்கு நாம் என்ன பதில் சொல்ல முடியும்.

கல்வியினால் ஒருவர் பெறக் கூடிய பயன் யாது? அது மீண்டும் மீண்டும் அடுத்தடுத்த பிறவிகளுக்கு இட்டுச் செல்கிறது எனில் கல்வி எப்படி ஏமாப்பாக அமையும். மேலும்,

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன

நற்றாள் தொழாஅர் எனில்"

எனவும் வள்ளுவர் பாடியுள்ளாரே (Parimelagar,1991). கல்வியின் மிகச் சிறந்த பயன் பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு, இறைவனின் இணையற்றத் திருவடிகளைச் சென்று சேர வேண்டும் என்பதே இதன் பொருள். அப்படியெனில் அவர் முன்னுக்குப் பின் முரணாகத் திருக்குறளை இயற்றி வைத்துள்ளாரா? எனவும் சிந்திக்கத் தூண்டுகிறதல்லவா?

இதற்கு முனைவர் மு. தெய்வநாயகம் அவர்கள் தரும் விளக்கம்: "ஒரு நிலையில் ஒருவன் கற்ற கல்வி, அவனுக்கு எழுகின்ற நிலைகள் தோறும் தொடர்ந்து பாதுகாவலாக நின்று உதவும் தன்மை உடையது" (Deivanayagam, 2021).

"அடுத்த குறட்பாவை நோக்குவோம்:

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்"

இக்குறட்பாவிற்கு பரிமேழலகர் தரும் விளக்கம்: "நீதி நூலுடையார், இவை அரசர்க்குரியன என்று உயர்த்துக் கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க, அங்ஙனம் செய்யாது மறந்தவர்க்கு எழுமையிலும் நன்மை இல்லையாகலான்" (Parimelagar,1991).

இக்குறட்பா அரசியல் என்னும் தலைப்பில் இடம் பெறுவதால் அரசனுக்குச் சொல்லப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது. மனிதர் யாவருக்கும் பொது அறமுறை உண்டு. அதிலிருந்து ஒருவன் தவறுவானானால் அவன் மனித நிலையிலிருந்தே தவறுபவனாவான். ஆனால் உலகில் ஒவ்வொருவருக்கும் அவரவர் ஏற்கும் பதவிக்கேற்ப ஒவ்வொரு கடமையுண்டு. நிர்வாகிக்கு ஒரு கடமை உண்டு. அமைச்சனுக்கு ஒரு கடமையுண்டு. அரசனுக்கு ஒரு கடமை உண்டு. எவன் எக்கடமையிலிருந்து தவறுகிறானோ, அவன் அப்பொறுப்பிலிருந்து தள்ளப்படுவான். இதுவே உலக இயல்பு. அவ்வாறே அரசனுக்குரிய கடமைகளை அவன் சரியாகச் செய்தல் வேண்டும். செய்யாது தவறுவானானால் என்ன ஏற்படும். அவனுடைய ஆட்சி நிலைபெறாமல் போகும். அவன் அரசனாக நீடிக்க முடியாது. அவன் அரச நிலையிலிருந்து தள்ளப்படுவான். இதைவிட்டு, அவனுக்கு, பல்லாயிரம் பிறவிகளிலும் அதாவது மரம், ஊர்வன, மிருகம் முதலான பிறவிகளிலெல்லாம் நன்மை இல்லை என்று கூறும் கருத்து பொருந்துமா? அல்லது அடுத்த மனிதப் பிறவிக்குத்தான் சொல்லப்பட்டது என்றால், அடுத்த மனிதப் பிறவியிலும் ஒருவர் மீண்டும் அரசராகவே இருப்பார் என்று கூற முடியுமா? இந்த அடிப்படையில் முனைவர் தெய்வநாயகம் அவர்கள் தரும் விளக்கம்: "அரசனுக்குச் சிறந்தவையென்று அறநூலாரும், சான்றோரும் உயர்த்திக்கூறிய செயல்களை அரசன் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும். அவற்றைச் செய்யாமல் மறந்த அரசருக்கு அவனுடைய வாழ்க்கையில் எழுகின்ற பல நிலைகளிலும் நன்மை ஏற்படுவது இல்லை" (Deivanayagam, 2021).

"அடுத்த குறட்பா:

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்

தான்புக் கழுந்தும் அளறு"

இக்குறட்பாவிற்கு பரிமேலழகர் தரும் விளக்கம்: "பேதையாயினான் வரும் பிறவிகளெல்லாம் தான்புக்கு அழுந்தும் நிரயத்தினை இவ்வொரு பிறப்புள்ளே செய்து கொள்ள வல்லவனாம்" இதற்கு முந்தைய குறட்பாக்களில் 'எழுமை' என்பதற்கு 'ஏழுவகையான பிறவி' எனப் பொருள் கூறி வந்த, இக்குறட்பாவில் மட்டும் 'வரும் பிறவிகளிலெல்லாம்' என்று கூறியது ஏன்? எழுமை என்ற சொல்லின் பகுதியாகிய 'எழு' என்பதற்கு 'ஏழு' என்னும் எண்ணுப் பெயரைப் பொருள் கொள்ளாமல், இக்குறட்பாவில் மட்டும் 'எழுகின்ற' என்ற வினைப்பொருளைக் கொண்டது ஏன்? என்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது (Parimelagar,1991).

பரிமேழலகர் இவ்வாறு இக்குறட்பாவுக்கு மட்டும் மாற்றிப் பொருள் கூறியிருப்பதற்குக் காரணம், இக்குறட்பாவில் சுட்டப்படும் 'எழுமையும் தான்புக்கழுந்தும் அளறு' என்னும் தொடராகும். இங்குப் பரிமேலழகர் தமது பிறவிச் சுழற்சிக் கொள்கையிலிருந்து மாறி, கடவுள், மோட்சம், நரகம்

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கையின் அடிப்படையில் பொருள் கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

உரையாசிரியர் பரிதியாரும் 'ஒரு சென்மத்தில் பேதைக்குணம் பெற்றுவிட்டால், அவன் ஏழு சென்மமும் நரகம் புகுவான்' என ஒன்றுக் கொன்று மாறுபட்ட பொருந்தா உரையே கூறியுள்ளார். ஏழு சென்மமும் நரகில் புகுவான் என்கின்ற பொழுது, நரகில் சென்றபின் மீண்டும் மீண்டும் பிறந்து நரகிற்கே செல்வான் என்பது எப்படிப் பொருந்தும். இது பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கே பொருந்தாக் கருத்தாக அமையும் என்பதால் பரிமேலழகர் இந்த இடத்தில் மட்டும், எழுமை என்பதற்கு 'ஏழு' எனப் பொருள் கொள்ளாமல், 'எழுகின்ற' எனப் பொருள் கூறியுள்ளார். எனவே இங்கு பிறவிச் சுழற்சிக் கொள்கை அடிபட்டுப் போகிறது. அதோடு எழுமை என்ற சொல்லுக்கு 'ஏழு பிறவிகள்' என்ற பொருளும் தவறு என்றாகிறது. முனைவர் தெய்வநாயகம் அவர்கள் தரும் விளக்கம்: "பேதையானவன் தம்மிடத்தில் எழுகின்ற பல நிலைகளிலும் தான் அழிந்து கிடந்து வருந்தும் கொடுந்துன்பத்தை இந்த ஒரு நிலையிலேயே தேடிக்கொள்ள வல்லவனாவான்" (Deivanayagam, 2021).

## எழுமையும் எழுபிறப்பும் ஒன்றா? வேறா?

### திருவள்ளுவர் நோக்கில் தெளிவான அணுகுமுறை

எழுமை என்பதற்கான சரியான பொருளை ஆராய்ந்தோமெனில், ஏழு பிறப்பு என்று பொருள் காணும்போது அது பொருந்தாத பொருளாக முரண்பாடு தருவதாக அமைந்திருப்பதைக் கண்டோம். ஆனால் எழுமை என்பதற்குப் பலநிலை எனப் பொருள் கொள்ளும்போது அந்த முரண்பாடுகள், சிக்கல்கள் நீங்குகின்றன. ஒருமை, எழுமை என்ற இரு சொற்களும் 'மை' விகுதி பெற்றுள்ளன. இவற்றை எண்ணுப் பெயர்களாகக் கொள்ள முடியாது. ஒருமை மகளிர் என்ற இடத்து ஒரு பெண் என வராது. ஒருமுகப்பட்ட மனநிலையுடைய பெண் என்ற பொருளில் தான் வரும். அதேபோல் எழுமை என்பது எழுகின்ற பலநிலைகள்

## ஆய்வின் மூலம் பெறப்படும் முடிவுகள்

### எழுபிறப்பு

அடுத்தடுத்து எழக் கூடிய பிறப்புகள். அதாவது அவருக்கு அடுத்த அவரது சந்ததிகளாகிய அடுத்த தலைமுறையினர்.

பிறவிப் பெருங்கடல் - இந்த சொற்றொடருக்கு இருவகையான பொருளைக் காண முடியும்.

1. ஒரே உயிர் பலவகையான உடல்களில் மீண்டும் மீண்டும் பிறத்தல். இது கடவுள் நம்பிக்கையற்ற பிறவிச் சுழற்சி கொள்கையாளர்களால் தரப்படும் விளக்கம்.
2. பல உயிர்கள் பல உடல்களில் பிறத்தல். அதாவது தலைமுறை தலைமுறையாகத் தோன்றும் பிறப்பு. எழு பிறப்பு - அடுத்தடுத்த தலைமுறையில் தோன்றக் கூடிய பிறப்பு.

எழுமை - ஒருவருடைய வாழ்வில் வரக்கூடிய பல நிலைகள். பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவர் குழந்தை, மாணவர், கணவன், மனைவி, தாய், தந்தை, தாத்தா, பாட்டி இதுபோன்ற பல நிலைகளை அடைகிறார்கள். இவ்வாறு வாழ்வில் எழக்கூடிய பல நிலைகள் என்பதே மேற்கண்ட குறட்பாக்களுக்குப் பொருத்தமான பொருளாக அமையும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து"

ஒருவருடைய வாழ்வில் ஒரு கட்டத்தில் அதாவது மாணவப் பருவத்தில் கற்ற கல்வியானது அவருக்கு எழுமையும் எழக் கூடிய பல நிலைகளிலும், பல கட்டங்களிலும் உறுதுணையாக அமையும் (Parimelagar,1991).

“ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து”

ஒருவர் ஒரு நிலையில் அதாவது இளமைப் பருவத்தில் அடக்கத்தோடு வாழ்ந்தால், அது அவரது வாழ்வின் அடுத்தடுத்த நிலைகளில், முதுமை வரையிலும் அவருக்குத் தக்க பாதுகாப்பாக, அரணாக அமையும் (Parimelagar,1991).

“எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்

விழுமம் துடைத்தவர் நட்பு”

தமக்கு இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர் செய்த உதவியானது மிகச் சிறந்த உதவியாகும். அத்தகைய சிறந்த உதவியை அவர் தம் எழுமையாகிய வாழ்வின் பல நிலைகளிலும் நினைவு கூர்ந்து போற்றுவார். மேலும் எழுபிறப்பும் - அதாவது அவரிலிருந்து தோன்றும் அடுத்தடுத்த தலைமுறையின் பிறப்புகளாகிய அவருடைய சந்ததிகளும் அவ்வுதவியை மறவாமல் நினைந்து போற்றுவர். இவ்வாறு பொருள் காண்பதே சிறந்த பொருளாக அமையும் (Parimelagar,1991).

## ஆய்வுப் பயன்

திருக்குறள் முதலான இலக்கியங்களுக்கு உரையாசரியர்களின் உரைகளை வைத்துப் பொருள் காண்கின்றபோது, சில வேளைகளில் உரையாசிரியர்களின் மனப்பாங்கு மூலத்தின் பொருளை மாற்றக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த ஆய்வில் உரைகளை ஒப்பிட்டு, மூலத்தோடு பெரிதும் ஒத்து செல்லக்கூடிய பொருளைக் கண்டறியும் நோக்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வினை அடிப்படையாக வைத்து திருக்குறளை இன்னும் ஆழ்ந்து உணர்ந்து, திருவள்ளுவரின் மனப்பாங்கினை அறிந்து கொள்ள உதவியாக அமையும், உரைகளை வைத்துப் பொருளை அறிகின்றபோது, அவற்றில் காணக்கூடிய சில முரண்பாடுகளை விருப்பு வெறுப்பின்றி அணுகி மேலும் பயனுள்ள, தரமிக்க ஆய்வுகளைத் தொடரவும் வாய்ப்புள்ளது.

## முடிவுரை

இவ்வாறு கடவுள் நம்பிக்கையுடையவாகிய திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் சில இடங்களில் கடவுள் நம்பிக்கை இல்லாத நாத்திகக் கொள்கை அடிப்படையில் உரையாசிரியர்களால் காணப்பட்ட பொருள் முரண்பாடு உடையதாக இருப்பது இங்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நேரடியாக திருவள்ளுரிடமே சென்று பொருள் தேடும் போது, அதாவது மற்ற குறட்பாக்களை வைத்து ஆராய்கின்ற போது, சரியான பொருள் தெளிவினைப் பெற முடிகிறது. மிகச் சிறந்த அறிஞர்கள் கூறினார்கள் என்பதை விட, அல்லது பலபேர் இவ்வாறு தான் கூறியிருக்கிறார்கள் என்பதைவிட வள்ளுவரின் வழியில், ‘எந்தக் கருத்தினை எவர் சொல்லக் கேட்பினும் அதன் உண்மைத் தன்மையை ஆராய்வதே அறிவுடைமை ஆகும்’ என்ற அறிவுரைப்படி செயல்படுவதே சால்புடைய செயலாகும்.

## References

Aravanan, K.P., (2003) Thiruvalluvam, Tamil Kottam, Chennai, India.

Deivanayagam, M., (1972) Ezhupirapu, International Tamil Anmaviyal Arakattalai Veeliyeedu, Chennai, India.

Deivanayagam, M., (2021) Thirukkural Unmai Urai, International Tamil Anmaviyal Arakattalai Veeliyeedu, Chennai, India.

Kundrakkudi Adigalaar, (2011) Thirukkural Urai Valam, Shri Shenbaga Publications, Chennai. India.

Parimelagar, (1991) Thirukkural Parimelagar Urai, Ganga Puthaga Nilaiyam, Chennai, India,

Swaminatha Iyer, U.Ve., (2009) Silappathiagaram Moolamum Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Varatharasanar, M., (1949) Thirukkural Theylivurai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License